## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.

**Calendar Case No. 132/2022**

**Prosecution Witness**:4

| | | | |
|---|---|---|---|
| Name | (PW4) Appukutti | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28th day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது குடியிருந்து கொண்டு ஒத்தப்பனையில் குடியிருந்து கொண்டு எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நானும், சக்திவேல் என்பவரும் முத்தூரில் இருந்து ஒத்தப்பனைக்கு வந்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு இருசக்கர வாகனம் நின்று கொண்டிருந்த வாகனத்தின் பின்புறம் இடித்து அதில் இருந்தவர் கீழே விழுந்து கிடந்தார். கீழே விழுந்து கிடந்தவரின் பாக்கெட்டில் இருந்த விசிட்டிங் கார்டைப் பார்த்து அதில் உள்ள எண்ணிற்கு விபத்தை பற்றி தகவல் சொன்னேன். மேற்படி நபருக்கு தலையில் அடிபட்டிருந்தது. விபத்தில் அடிபட்டவருக்கு நான் தண்ணீர் கொடுத்தேன். பிறகு அவரது அப்பா, அம்மா சம்பவ இடம் வந்ததும் நான் சென்றுவிட்டேன். விபத்தை ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் எனக்கு தெரியாது. ஆனால் மேற்படி லாரியை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரிதான். மறுநாள் விபத்தில் அடிபட்டவர் இறந்துவிட்டதாக தகவல் கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அவர் அடிபட்டு கிடந்தார். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்து எவ்வாறு நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இருக்கும்போதே போலீசார் சம்பவ இடம் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அப்போதுதான் என்னை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.28 08:52:22 +0530

விசாரித்தார்கள். பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வேறு யாரை போலீசார் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். நான் முதலுதவி செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.28 08:52:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 132/2022**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | (PW5) Kuppusamy | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th **day of January 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஒத்தப்பனையில் குடியிருந்து கொண்டுகைத்தறி வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை சுமார் 5 வருடங்களுக்கு முன்பு எனது வீட்டிற்கு செல்லும் வழியில் சிவகிரி போலீசார் நின்று விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நானும், என்னுடன் வந்த நல்லசிவம் என்பவரும் சென்று பார்த்தோம். போலீசார் தாங்கள் ஒரு விபத்து வழக்கு சம்மந்தமாக வரைபடம் வரைவதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படியும் சொன்னார்கள். அதற்கு சம்மதித்து நானும், நல்லசிவமும் கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் கையொப்பம் செய்தபோது மாலை நேரம் என்றால் இல்லை. காலை சுமார் 09.30 மணி இருக்கும். போலீசார் கையொப்பம் வாங்கிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.28 08:52:33 +0530

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.28 08:52:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.